இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி

# பசுமைக்கதிர்

(ஜுலை - டிசம்பர் 2024)

# வேளாண்மை அறிவியல் மையம்

## திருவண்ணாமலை மாவட்டம்

கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.
தொலைபேசி : 04182-290551, 6384093306,
kvktvmalai91@gmail.com
www.kvktiruvannamalai.com

G20 भारत 2023 INDIA

INTERNATIONAL YEAR OF MILLETS 2023

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. - குறள்

**ஆசிரியர் குரல்**

## விவசாயச் சொந்தங்களுக்கு,

மீண்டும் பசுமைக்கதிர் வாயிலாக விவசாயப்பெருமக்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மாறிவரும் பருவநிலைக்கு தகுந்தாற்போல பயிர்சாகுபடியில் பல இன்னல்களை விவசாயிகள் தற்போது சந்தித்து வருகின்றனர். பருவம் தவறிய மழை, வெப்பநிலை மாறுபாடு, விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறையென பல்வேறு பிரச்சினைகள் இருந்த போதும் விவசாயத்தை தொழிலாக செய்யும் விவசாயிகளால்தான் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாக இந்தியா தற்போது வளர்ந்துள்ளது. நவீன தொழில்நுட்பங்கள் மூலம் சாகுபடி செய்யப்பட்டாலும் இயற்கை முறை விவசாயம் தற்போது பரவலாக்கப்பட்டு வருகிறது. இயற்கை விவசாய முறைகளும் அதற்கான இடுபொருட்கள் தயாரிப்பு முறையும் குறித்த விழிப்புணர்வு மத்திய மாநில அரசுகள் முன்னெடுத்து வருகின்றன. அடுத்த தலைமுறைக்கு நஞ்சில்லா உணவை கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இயற்கை விவசாய நடைமுறைகளை நாம் பயன்படுத்துதோடு மற்ற விவசாயிகளிடத்திலும் இதுபற்றிய புரிதல் ஏற்படுதத வேண்டும். இதற்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

ச.ரமேஷ், B.A.,LLB.
சிறப்பு ஆசிரியர்

# வயல் வெளி ஆய்வுத்திட்டம்

## வாழையில் அதிக மகசூல் தரும் நுண்ணூட்டக்கலவைகளை மதிப்பீடு செய்தல்

வேளாண்மை அறிவியல் மையம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் போளூர் வட்டம் படவேடு கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரும் நுண்ணூட்டக்கலவைகளை வாழையில் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் எக்டருக்கு 369.3 குவிண்டால் மகசூல் தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட வாழை சக்தி (Banana sakthi) நுண்ணூட்டக்கலவை தொழில்நுட்பத்தால் பெறப்பட்டது. இது IIHR Banana special தொழில்நுட்பத்தை விட 21.42 சதவிகிதம் அதிகமாகும். நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 87771/- வரை கிடைத்ததுடன் வரவு செலவு விகிதம் 2.85 கிடைக்கப்பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.





## மிளகாயில் உயர் விளைச்சல் தரும் நுண்ணுயிர் தொகுப்பினை மதிப்பீடு செய்தல்

வேளாண்மை அறிவியல் மையம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் சேத்பட் வட்டம் மட்டப்பிறையூர் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு மிளகாயில் உயர் விளைச்சல் தரும் நுண்ணுயிர் தொகுப்பினை பயன்படுத்தி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மதிப்பீட்டின் முடிவில் Arka Microbial Consortium நுண்ணுயிர் தொகுப்பினை விட CSR Growsure நுண்ணுயிர் தொகுப்பானது எக்டருக்கு 243.05 குவிண்டால் மகசூலாக பெறப்பட்டது. நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 85378/- வரை கிடைக்பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

## செம்மறி ஆடுகளில் புறஒட்டுண்ணிக்கான தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்தல்

வேளாண்மை அறிவியல் மையம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் சேத்பட் வட்டம் மட்டப்பிறையூர் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு மிளகாயில் உயர் விளைச்சல் தரும் நுண்ணுயிர் தொகுப்பினை பயன்படுத்தி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மதிப்பீட்டின் முடிவில் Arka Microbial Consortium நுண்ணுயிர் தொகுப்பினை விட CSR Growsure நுண்ணுயிர் தொகுப்பானது எக்டருக்கு 243.05 குவிண்டால் மகசூலாக பெறப்பட்டது. நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 85378/- வரை கிடைக்பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

## வாழை வாடல் நோயை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்களை மதிப்பீடு

வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் போளூர் வட்டம் படவேடு கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு வாழையை தாக்கும் வாடல் நோயை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



மதிப்பீட்டின் முடிவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பட்ட தொழில்நுட்பமானது நோயை திறம்படக்கட்டுப்படுத்தி ஒரு எக்டருக்கு 535.02 குவிண்டால் மகசூல் கிடைப்பது உறுதி செய்யபட்டது. மேலும் விவசாயிகளுக்கு நிகர வருமானம் ரூபாய் 471617/- எக்டருக்கு கிடைப்பதாக விவசாயிகள் கூறினார்.

## ஆட்டுக்குட்டியில் பாலுக்கு மாற்று பால் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்தல்

வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் வந்தவாசி வட்டம் தென்சேந்தமங்களம் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு ஆட்டுக்குட்டிகளில் பால் மாற்றுத் தொழில்நுட்பங்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. NIANP மற்றும் CSWRI நிறுவனத்தின் பால் மாற்றுத் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்ததில் NIANP நிறுவனத்தின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதில் ஆட்டின் உடல் எடை CSWRI விட 2 கிலோ அதிகரித்து 18 கிலோ வரை கிடைத்தது. இது விவசாயிகளின் வளர்ப்பு முறையை விட 38 சதவிகிதம் அதிகமாகும். மேலும் விவசாயிகளுக்கு நிகர வருமானம் ரூபாய் 27655/- ஆகவும் வரவு செலவு விகிதம் 2.38 என கணக்கிடப்பட்டது.

# முதல்நிலை செயல்விளக்கங்கள்

## நிலக்கடலையில் காட்டுப்பன்றி விரட்டி செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் காரிப் பருவத்தில் செய்யார் வட்டம் சிறுவேளியநல்லூர் கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு நிலக்கடலையில் காட்டுப் பன்றியை விரட்டும் மூலிகை விரட்டி செயல்விளக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 19.29 குவிண்டால் மகசூல் பெற்றனர். சராசரி நிகர வருமானமாக ஒரு எக்டருக்கு 39033/- ரூபாய் பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர். மேற்குறிப்பிட்ட மகசூல் சராசரி விளைச்சலை விட 19.4 சதவிகிதம் கூடுதலாக விவசாயிகள் பெற்றனர்.

## நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை



நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் விவசாயிகள் அதிக மகசூல் இழப்பை சந்திக்கின்றனர். இதனால் அதிக பண விரயமும், எஞ்சிய நச்சு நிறைந்த விளைபொருட்களுமே உற்பத்தியாகின்றன. இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேளாண்மை அறிவியல் மையம் 2024 காரிப் பருவத்தில் அனக்காவூர் வட்டாரம் காரனை கிராமத்தில் 10 பட்டியலின விவசாயிகளின் வயலில் முதல் நிலை செயல்விளக்கம் மூலம் நவீன தொழில் நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டது.

செயல்விளக்கத்தின் முடிவில் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கம் வெகுவாக குறைக்கப்பட்டது. மேலும் மகசூலானது 11.82 சதவீதம் கூடுதலாக கிடைத்ததாகவும், எக்டருக்கு ரூபாய் 68794/- கூடுதல் இலாபம் பெற்றதாகவும் விவசாயிகள் கூறினர்.

## சம்பங்கியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் காரிப் பருவத்தில் கலசப்பாக்கம் வட்டம் மோட்டூர் கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு சம்பங்கி பூவில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 105.9 குவிண்டால் மகசூல் பெற்றனர். இவை விவசாயிகள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை விட 19.79 சதவிகிதம் கூடுதலாக மகசூல் பெற்றனர். இதன் வரவு செலவு விகிதம் ஒரு எக்டருக்கு 2.89 ஆகும்.

## ஆடுகளில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை - முதல் நிலை செயல் விளக்கம்

ஆரணி வட்டம், மட்டதாரி கிராமத்தில், 10 விவசாயிகளுக்கு 20 ஆடுகளில் மூலிகை நோய் எதிர்ப்பு மருந்துகலவை குடற்புழு நீக்கத்திற்கான செயல் விளக்கம் செய்யப்பட்டது. ஆடுகளை தாக்கும் நோய்கள் மற்றும் அதன் மேலாண்மை முறைகள் பற்றிய விழிப்புணர்வும், தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் பற்றிய விழிப்புணர்வும் விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்டது. இந்த செயல் விளக்கத்தின் முடிவில் ஆட்டுகுட்டிகளின் எடை13 கிலோவிலிருந்து 17 கிலோவாக உயர்ந்தது. இது 31 சதவிகிதம் ஆடுகளின் உடல் எடை கூடியதால் வருடத்திற்கு 22440 வரை கூடுதலாக வருமானம் பெற்றனர்.

## விரிவாக்க செயல்பாடுகள்

### ஊரக இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி





வேளாண் அறிவியல் மையம், திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு அரசு வேளாண்மை உழவர் நலத்துறையுடன் இணைந்து திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஊரக இளைஞர்களுக்கான விதை உற்பத்தி குறித்து 22.07.2024 முதல் 27.07.2024 வரை 6 நாட்கள் திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில திருவண்ணாமலை மாவட்ட திட்ட இயக்குநர் (அட்மா) மற்றும் வேளாண்மை இணை இயக்குநா (பொ.) முனைவர். க.உமாபதி அவர்கள், திரு. சே.கண்ணன் வேளாண்மை துணை இயக்குநா் (உழவர் பயிற்சி நிலையம்) அவர்கள் கலந்துகொண்டு விதை உற்பத்தி வழிமுறைகள் மற்றும் வேளாண்மை துறையிலுள்ள பல்வேறு திட்டங்கள் பற்றி விளக்கினார். வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் விதை நேர்த்தி, விதை உற்பத்தி தொழில்நுட்பம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள். இதில் பயற்சிபெற்ற 15 விவசாயிகளுக்கு பயிற்சி கையேடு மற்றும் பயிற்சி சான்றிதழ் வழங்கப்பட்டது.

### மீன் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல் கருத்தரங்கம்





வேளாண்மை அறிவியல் மையத்தில் 30.07.2024 அன்று மீன் வளர்ப்பு மற்றும் மீன்களில் மதிப்பு கூட்டுதலில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் திருவண்ணாமலை மாவட்ட மீன் வளர்ப்பு துறையுடன் இணைந்து ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு.ச.ரமேஷ் அவர்கள், சென்னை, மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர். திபோரல் விமலா அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட மீன்வளர்ப்பு துறையின் உதவி இயக்குநர் திரு. ஜி.வேலன் அவர்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் திரு.வே. சுரேஷ் அவர்கள் கலந்து கொண்டனர். மீன் வளர்ப்பில் அதிக இலாபம் பெறுவது மற்றும் சூழ்நிலைக்கேற்றவாறு மீன் வளர்ப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. கேரளாவிலுள்ள மத்திய மீன் வள தொழில்நுட்ப நிறுவனத்தின் முதுநிலை விஞ்ஞானி முனைவர்.வி.சந்திரசேகர் காணொலி காட்சி வாயிலாக மீன் வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்தும் மீன் வளர்ப்பில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்தும் சிறப்புரையாற்றினார். இதில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த 31 முன்னோடி விவசாயிகள் கலந்து பயன்பெற்றனர்.

### மண்வள முகாம் மற்றும் உலக மண்தின விழா





அனக்காவூர், தெள்ளார், ஜமுனாமரத்தூர் வட்டங்களிலுள்ள காரணை, சேனல் மற்றும் விளாங்குப்பம் கிராமங்களில் 25.07.24, 30.07.2024, 05.12.2024 நாட்களில் சிறப்பு மண் வள முகாம் மற்றும் உலக மண்தின விழா கொண்டாடப்பட்டது. இம்முகாமில் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண்வள அட்டைகளும் வழங்கப்பட்டன. முகாம்களில் மண் ஆய்வின் முக்கியத்தும் மற்றும் மண் மாதிரி எடுத்தல் குறித்து 134 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. உலக மண்தின விழாவில் ஜமுனாமரத்தூர் வட்டத்திலுள்ள சீனிவாசா தொண்டு நிறுவனம் கலந்து கொண்டது.

### பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா

வேளாண்மை அறிவியல் மையம், ரோட்டரி கிளப் ஆப் காஞ்சி இன்பினிட்டி மற்றும் இந்தோ-அமெரிக்கன் கலைக் கல்லூரி இணைந்து 21.08.2024 அன்று பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மரம் நடும் விழா நடைபெற்றது. ரோட்டரி கிளப் ஆப் காஞ்சி இன்பினிட்டி தலைவர் ஞானசேகரன் அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பார்வதி சீனுவாசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். இதில் 2800 மரக்கன்றுகள் வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் சாலையின் இருபுறங்களிலும் நடப்பட்டது. இந்தோ-அமெரிக்கன் கலைக் கல்லூரி உதவி பேராசிரியர் முனைவர் மாலதி மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன், ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் விவசாயிகள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 72 நபர்கள் கலந்துகொண்டனர்.







## வேளாண்மை அறிவியல் மையம் - பொன்விழா ஆண்டு கொண்டாட்டம்

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி நிதி உதவியுடன் புதுச்சேரியில் வேளாண்மை அறிவியல் மையம் முதன்முதலாக தொடங்கப்பட்டு 50 ஆண்டு நிறைவடைந்ததையொட்டி இவ்வாண்டு முழுவதும் பொன்விழா ஆண்டாக இந்தியாவிலுள்ள அனைத்து வேளாண்மை அறிவியல் மையங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நெல்லியிலுள்ள வேளாண் அறிவியல் மையத்தில் கே.வி.கே. வின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் 25 முதல் 27 வரை விவசாயிகளின் பங்களிப்போடு வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது.



இந்நிகழ்ச்சியின் பொன்விழா தொடர் ஓட்டம் ஜோதி செங்கல்பட்டு வேளாண்மை அறிவியல் மையத்திலிருந்து பெறப்பட்டு பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளின் பார்வைக்காக திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை அறிவியல் மையத்தில் வைக்கப்பட்டு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சித்தாத்தூர் கால்நடை மருத்துவர் கார்த்தி, வெம்பாக்க வட்டார தோட்டக்கலை உதவி அலுவலர் திரு. நரசிம்மன் மற்றும் சித்தாத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஓவிய ஆசிரியர் திரு பிராபாகரன் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இயற்கை வேளாண்மை, புறக்கடை கோழி வளர்ப்பில் தீவன மேலாண்மை, பழக்கன்றுகள் நடவு முறை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுடன் ஆளில்லா விமானத்தின் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளித்தல் பற்றிய செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. வெம்பாக்க வட்டாரத்திலுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து விவசயாயிகள் மற்றும் மாணவர்கள் என 93 நபர்கள் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.



## கிராம தொழில் வாயப்புகள் பற்றிய விழிப்புணர்வு முகாம்

வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் காதி, கிராமத் தொழில்கள் ஆணையம், சென்னை இணைந்து 21.10.2024 அன்று காதி கிராமோத்யோக் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் கிராம தொழில் வாயப்புகள் பற்றிய விழிப்புணர்வு முகாமை நடத்தியது. காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் உதவி இயக்குநர் திருமதி செல்வி கருணாநிதி, ஆணையத்தின் மாநில இயக்குநர் திரு. பி.என்.சுரே", வேளாண்மை அறிவியல் மையத்தின் பெருந்தலைவர் திரு.ச.இரமேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் மூலம் செயல்பட்டு வரும் பல்வேறு தொழில்சார்ந்த திட்டங்கள் மற்றும் அதற்குரிய மானியங்கள் குறித்தும் சிறப்புரையாற்றினார். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து விவசாயிகள் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 102 நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கால்நடை மருத்துவ முகாம்கள்

வேளாண் அறிவியல் மையம் ஐ.சி.ஐ.சி.ஐ நிறுவத்துடன் இணைந்து நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கீழ்பெண்ணாத்தூர் வட்டத்திலுள்ள அண்டப்பட்டு, விளாங்குப்பம், வேடநத்தம், கனியாம்பூண்டி, மானாவரம், நாடகநந்தல், ஜமின் கூடலூர் ஆகிய கிராமங்களில் 21 கால்நடை முகாம்களை நடத்தியது. இம்முகாம்களில் 2947 கலந்து கொண்டு பயன் பெற்றனர். விவசாயிகளின் 2947 கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.








**சிறப்பு ஆசிரியர்**

திரு.ச.இரமேஷ், தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

**ஆசிரியர்**

திரு.வே.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

**ஆசிரியர் குழு**

திருமதி.த.மார்க்ரெட், தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)
திரு.ப.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு)
மரு.கா.மாயகிருஷ்ணன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)
செல்வி.மா.ஐஸ்வர்யா, தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
திரு.ர.விஜயகுமார், தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
திருமதி.ம.சாந்தி, பண்ணை மேலாளர்
திரு.ப.சௌத்திரி, திட்ட உதவியாளர் (ஆய்வகம்)

**நிர்வாகக் குழு**

திருமதி.ம.விஜி அலுவலக உதவியாளர்
திரு.ஒ.சேகர், திட்ட உதவியாளர் (கணிப்பொறி)
திரு.கா.வாசிமலை, சுருக்கெழுத்தாளர்